தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஹு ஐப்பசிமீ 20உ (5-11-'22.) | ப. 27.

விஷய அடக்கம்.

1. உலக நடை 275
(R. பஞ்சாபகேசன்)

2. சாரதா ஸல்லாபம் ... 276
(சாரதா)

3. சோதிடப்புலி சோணாசலம் ... 277
(ராம சந்திரர்)

4. நமது பாகவதர் ... 278
(Y. மஹாலிங்க சாஸ்திரி M.A. B.L.)

5. குலமாதர் கும்மி ... 279
(கம்பதாஸர் A. R. ஸுப்ரமண்யய்யர்)

6. புயற் காற்று ... 280
(V. நாராயணையர், M.A.,M.L.)

7. மதிப்புரை ... 283
(உதவி பத்திராதிபர்)

தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுகிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் 3 0 0	½-வருஷம் 3 8 0
1-வருஷம் 5 0 0	1-வருஷம் 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது ; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அநுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில்மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்.
மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது !

உபயோகமுள்ளது ! !

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், சீல்பிடிப்பு, இருமல, ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு 0—6—0	டப்பி 1-க்கு 0—2—0	டப்பி 1-க்கு 0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

உம்மிடி ராமய்யசெட்டி குருசாமிசெட்டி கம்பெனி

நகை வர்த்தகர்கள்
25, சைனுபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి కంపెని
నగల వర్తకులు
25, చైనా బజారు రోడ్డు, మదరాసు.

பணம் திருப்பி கொடுக்கலாம்

ஒரு வருஷம் எங்கள் நிபந்தனையின்படி படிப்பவர்கள் இங்கிலீஷ் பாஷையில் குறைந்தபக்ஷம் 4-வது பாரம் வரையுள்ள படிப்பாவது அடையலாம்.

ஜோலிக்கு இடையூறில்லாமல் தங்கள் வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளலாம்.

எப்பொழுதும் முன் பணமாக

வருஷசந்தா ரூ 10—8—0

புஸ்தகங்கள் ஒரே மொத்தமாக கொடுக்கமாட்டோம். எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு வஷத்திய படிப்பை யடைந்தவர்களுக்கும், 4-வது பாரம் வரை படித்தவர்களுக்கும் 3 வருஷம் கொண்டு பல விதத்திலும் இந்தியன் யூனிவர்ஸிடி B.A. பரீக்ஷைக்கு சமமான லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு சேருவதற்கு நாங்கள் மாணக்கர்களை தயார் செய்கிறோம்.

ஏராளமான கம்மிஷனுக்கு வேலைசெய்ய ஏஜெண்டுகள் தேவை.

E. C. School,
Trivandrum.

இந்த பேப்பரின் பெயர் சொல்லிவரக் கூடிய ஆர்டர்களுக்கு சந்தா தொகையில் அணா எட்டு குறைவு செய்யப்படும்.

மஹாத்மா காந்தியின் சரித்திரம்

உலகிலே ஒப்புயர்வற்ற மகா புருஷனெனவும், ஸ்ரீபாரத பூஷணமெனவும் பெரியோர்களால் கொண்டாடப்படும் இப்பெருமானது சரித்திரத்தையும் அரும் பெருங் குணங்களையும் உயர்ந்த சீலத்தையும் ஒப்புயர்வற்ற தன்னலப் பரித்தியாகத்தையும் அறிய விரும்பும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இந்நூல் சிறந்த கருவியாகும். குழந்தைப் பருவ முதல் இன்றளவும் மாகாத்மாவின் வாழ்வில் நேர்ந்துள்ள சம்பவங்கள் எல்லாம் அழகான தமிழ் நடையில் பாலரும் படித்தறியும் வண்ணம் விரிவாக எழுதப்பட்டுள்ளன. விலை அணா 0-8-0.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

நவநீத கிருஷ்ண பாரதியார் இயற்றிய

உலகியல் விளக்கம்

இந்நூலின் முதற்பாகமாகிய அறநெறியியல் அச்சாகிவிட்டது. விலை ரூபாய் இரண்டே. வேண்டுவோர் யாழ்ப்பாணம் பெரிய கடைத்தெரு, கிளவ் அச்சுக்கூடம், மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழர் நேசன்.

சாஸ்திர அறிவைப் பரவச் செய்யும் மாதாந்தப் பத்திரிகை.
இது தமிழர் கல்விச் சங்கத்தாரால் வெளியிடப்படுவது

பட்டமும் பரிசும் பெற்ற பல மேதாவிகளால் எழுதப்பட்டது. பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் படித்தறிதற் பொருட்டு மிகவும் எளிய நடையில் உள்ளது. சாஸ்திர விஷயங்களைத்தவிரப் பல கதைகளையும் குறிப்புகளையும் உடையது.

அநேகச் சித்திரப்படங்களோடு கூடியது.

கல்வி இலாகா டைரெக்டராலும், ஜில்லாபோர்டு தாலூகாபோர்டு தலைவர்களாலும், பள்ளிப் போதகர்கள் பலராலும் ஆதரிக்கப்பட்டது. உள் நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகைகளால் புகழப்பட்டது.

வருஷச் சந்தா மூன்று ரூபாய்.

கௌரவக் காரியதரிசி,
தமிழர் கல்விச்சங்கம், மைலாப்பூர்.

உலக நடை

[R. பஞ்சாபகேசன்]

துயையில் கூடவிருக்கும் காங்கிரஸில் ஒத்துழையாமை விதிகள் ஏதாவது மாறுதலடையுமோ வென பலர் ஐயமுறுகின்றனர். ஒத்துழையாமைக் கட்சியில் இப்போது இருவித வேற்றபிப்பிராயங்கள் உண்டாயிருக்கின்றன. சிலர் காந்தி புகட்டியபடி மாயைக்கோயில்களான சட்டசபைகளில் புகுவது கூடவே கூடாதெனவும், சிலர் அவ்வித சட்டசபையில் புகுந்து அங்கு வேலை நடைபெறுதவாறு ஒத்துநடந்து, பிறகு அரசாங்கத்தார் தங்களுக்கிருக்கும் பிரத்யேக அதிகாரத்தை உபயோகப்படுத்த முன் வரும்படிசெய்து, அதிலிருந்து சீர்திருத்தங்களின் மாயையை உலகத்தாருக்கு உறுதிப்படுத்துவதென்றும் சொல்லுகிறார்கள்.

துருக்கிச் சமாதான விஷயங்கள் ஒழுங்குடன் முடிந்தேறுமோ, அல்லது மறுபடியும் யுத்தம் துவங்குமோ வென சொல்லக்கூடவில்லை. துருக்கியர் வார்த்தைகளும் நேசதேசத்தார் எண்ணங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. நேசதேசத்தார், முக்கியமாய் ஆங்கிலேயர்கள், தங்கள் பிரஜைகளுக்கு இதுவரை துருக்கியில் இருந்து வந்த வியாபார சௌகரியங்கள், பொதுச்சட்ட விலக்கு முதலிய தனி உரிமைகள் இனியும் வேண்டுமெனவும், துருக்கியர் தங்கள் பிரஜைகளுக்கும் தங்கள் நாட்டில் தங்கும் அன்னிய நாட்டினருக்கும் சட்ட வேற்றுமை பாராட்டமுடியாதெனவும் சொல்லிவருகிறார்கள். இவ்விஷயம் உடன்படிக்கை நிபந்தனைகளில் பலமான விவாதத்திற்கு வரக்கூடும்.

துருக்கி சுல்தான் இனி லௌகிக விஷயங்களில் தலையிடாது, துருக்கி ராஜ்ய பரிபாலனத்தை அங்கோரா ஜனப்பிரதிநிதி சபையிடம் ஒப்புவித்துவிட்டு, உலகத்திலுள்ள முஸ்லீம்களுக் கெல்லாம் மத குருவாகமட்டும் விளங்கும்படி சம்மதிக்கத் தூண்டப்பட்டார். இதைக்குறித்து இந்தியமுஸ்லீம்கள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டனர். இறுதியில் சுல்தான் இதற்கு இணங்குவதாயும் அவரை ஒருதீங்கும் அணுகாது துருக்கியர் காப்பாற்றுவதாக வாக்களித்திருப்பதாயும் செய்தி யெட்டியிருக்கிறது. இனி எல்லா முஸ்லீம்களும் இது விஷயமாய் யாது செய்யப்போகின்றனரோ தெரியவில்லை.

ஸிரியாவில் இதுவரை ராஜ்யபாரம் ஏற்றுவந்த ப்ரஞ்சுக்காரர்கள் அத்தேசத்தை தனி சுயராஜ்யமாய் செய்து விட்டு அநேகமாய் விலகிவிடக்கருதுகிறார்கள். ப்ரஞ்சுக்காரர் இதுகாறும் இவ்விடமிருந்துவந்தது பாலஸ்தீனத்தில் ஆட்சிபுரியும் ஆங்கிலேயர்களுக்கு அநுகூலமாயிருந்தது. இனி ஆங்கிலேயர்கள் அதிக சேனையை வைத்தே அரசு செலுத்தவேண்டிவரும். பாலஸ்தீனத்திலிருக்கும் அராபியர்களுக்கோ ஆங்கில அரசாட்சியில் திருப்தி யில்லை. அங்கிருந்து ஆங்கிலேயர்கள் விலகுவார்களாகில், பாலஸ்தீன் துருக்கியர் வசமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை பலப்பட்டுக்கொண்டே வருகிறது. இவ்விஷயத்தில் முஸ்லீம் தலைவர்கள் வெகு ஊக்கமெடுத்து முயன்று வருகிறார்கள். மூல்டானில் நடந்த கலகத்தை பெரிதாக மதித்து இவ்வொற்றுமைக்கு பங்கமுண்டாயிற்றென வெண்ணுவது பொருந்தாது. பொதுவாக முஸ்லீம்களுடைய மனது அடைந்திருக்கும் மாறுபாட்டை நன்குயறியலாம். ஆப்கானிஸ்தானத்தில் ஹிந்து பிரஜைகளுக்கு இப்போது சம உரிமைகள் கிடைத்திருக்கின்றன. பசுக்களைக் கொல்லக் கூடாதெனவும் அமீர் கட்டளையிட்டிருக்கிறாராம். ஹிந்துக்கள் தங்கள் மதாசாரப்படி ஒழுகிவரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இடாலியில் சிலவருஷங்களுக்கு முன் 'போல்ஷிவிக்' கொள்கைகள் பரவி, எங்கும் கலகம் குடிகொண்டு உயிர்ச்சேதங்கள் உண்டான காலத்தில், அரசாங்கத்தார் கலகத்தை யடக்க சக்தி யற்றிருந்ததைக் கண்டு, தேசத்தில் வாலிபர்களநேகர் சேர்ந்து கலகங்களை போரிட்டடக்கி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்திவந்தார்கள். இவ்வாலிபக் கூட்டம் 'பஸ்ஸிஸ்மோ' எனப் பெயர் பூண்டு முஸ்ஸோலினியை தலைவராகக் கொண்டு தேசத்தைக்காப்பாற்றி வந்ததோடு அரசாங்க அக்கிரமங்களையும் எதிர்த்துவந்தது.

இடாலி மந்திரி சபையில் அடிக்கடி மாறுதல்களும் சிலவருஷங்களாக ஏற்பட்டு கடைசியில் இப்பொழுது பிரதம மந்திரியாக முஸ்ஸோலினியே அமர்ந்திருக்கிறார். ராஜ்ய நிர்வாகத்தில் இவரது திறமை இனி வெளிவர வேண்டும். இவரும் இவர் கூட்டத்தாரும் வாலிபர்களே. ஜனங்களும் இவர்களிடத்தில் பிரீதிகொண்டவர்கள். சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர பலம் படைத்த அரசாங்கம் இப்போது தான் ஏற்பட்டிருக்கிறது. இடாலியின் முற்போக்கைப் பற்றிய விஷயங்களில் இனி முயன்றுவருவார்கள்.

இந்தியாவில் குற்றச்சட்டத்தில் ஐரோப்பியர்களுக்குத் தனியே சில சௌகரியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வித பேதங்கள் நியாய நிர்வாகத்தில் கூடாதென சட்டத்திருத்தம் செய்யவேண்டுமென்று வெகு காலமாக முறையிட்டு வந்தோம். இத்திருத்தங்களைப் பற்றிய சிபார்சுகள் இந்தியா மந்திரியிடம் அனுப்பப்பட்டு அங்கிருந்து வெளிக்கிளம்பவில்லை. இதனிடையே, ஐரோப்பிய சங்கத்தின் காரியதர்சி, சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு குறிப்புகள் விடுத்திருக்கின்றார். ஆங்கிலேயர்களுக்கு முன்னிருந்த சுதந்திரங்கள் நீடிக்கவேண்டுமாம். இவை 'ஆங்கிலோ ஸாக்ஸன்' களாகிய தங்களுடைய பரம்பரையின் பாத்தியதையாம். தங்கள் பாத்தியதையைக் கொண்டாடுவதில் ஏனையோர்களுக்குப் பிழை செய்ததாகாதாம்.

சென்னையில் மகாஜனசபையின் வருஷாந்தரக் கூட்டம் இவ்வாரம் நடைபெற்றது. சபையின் பெயரைக் கேட்டாலே வெளியூர் ஜனங்களுக்கு பெரிய மதிப்பு பெற்றுவந்தது. அதன் அங்கத்தினர்களின் பெயரும் புகழும் சொல்லத்தேவையில்லை. இவ்வருஷாந்தரக் கூட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களால் இப்பெரும் மதிப்பை இழந்து விட்டது. சிறு குழந்தைகள் விளையாட்டாய் முடிந்தது. சிலர் சந்தா பணத்தை செலுத்தாததால் அவர்கள் இக் கூட்டத்திலேயே கலந்து கொள்ளக் கூடாதென்று ஓர்விவாதம் சபைமுன் வந்தது. பலர் இவ்விவாதத்தால் அதிருப்திகொண்டு, கட்டடத்தின் வேறு பக்கம்போய் தனிக்கூட்டம் கூடினார்கள்.

சாரதா ஸல்லாபம்

[சாரதா]

தற்காலத்தில் இங்கிலாந்தில் மந்திரிகள் மாறுதலினால் இந்தியாவின் நிலைமை எவ்வாறு மாறுதலடையுமோ வென்று பலரும் சிந்திக்கக்கூடியதே. புதிதாய் வந்த மந்திரியார் தான் அனுஷ்டிப்பதாயிருக்கும் மார்க்கங்களை எடுத்துச் சொல்லிய பொழுது இந்திய தேசத்தை சுவராஜ்ய வழியில் செல்லும்படி விடுவதோடு, துருக்கி சம்பந்தமாக பிரான்ஸ் தேசத்தாரோடு ஒத்து நடத்துவதாயும் கூறினார். பின் சொல்லிய வழியினால் இந்தியாவிலுள்ள மகமதியர்களுக்குத் திருப்தியுண்டாகலாம். அப்படிச் செய்யவேண்டுமென்பதே இங்கிலாந்தில் அநேகருடைய அபிப்பிராயமானாலும் இதற்கு முன் இந்தியா மந்திரியாயிருந்த மாண்டேகு அவ்வாறு செய்ய யத்தனித்ததினாலேயே தன் வேலையை யிழந்தாரென்பதை கவனிக்கும் பொழுது, இப்பொழுது புதிய மந்திரிகள் இவ்வாறு தீர்மானித்ததற்குக் காரணம் இந்தியாவில் மகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் உண்டாயிருக்கும் ஒற்றுமையை யொருவாறு மாற்ற வேண்டுமென்ற எண்ணமாயிருக்குமோ வென சந்தேகமுண்டாகிறது. ஆனால் அது எவ்வாறு முடியுமென்பது சொல்லமுடியாது.

இந்தியாதேசம் சுயராஜ்ய வழியில் விருத்தியடைவது சம்பந்தப்பட்டவரையில் இங்கிலாந்தில் மந்திரிகள் மாறுதலினால் அதிக வித்தியாசம் ஏற்படாது. ஏனெனில் எத்திறத்தார் அதிகாரத்திலிருப்பினும் இத்தேசத்தாருடைய சுயமுயற்சியாலடைய வேண்டியவற்றிற்கு பிரதிகூல முண்டாகாது. சாமான்யமாய் தவம் செய்வோருக்கு இடையூறியற்றுவதில் அசுரர்களும் அமரர்களும் சமானமே. முன் சொல்லியவர்கள் தவத்தை யழிப்பதாகவே யத்தனிப்பார்கள். பின் சொல்லியவர்கள் தவம் செய்வோர் திறமையை பரீட்சிப்பதாக கூறுவார்கள். இதுதான் வித்தியாசம். இவ்வாறான வித்தியாசந்தான் இந்த விஷயத்திலும் உள்ளது. இத்தேசத்தாருடைய கடைமை இப்பொழுது தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்ற வேண்டிய மார்க்கத்தில் நன்றாகப்பதித்து அதில் மனத்தளர்ச்சியில்லாமல் செல்வதாகும்.

ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரிகள் இங்கிலாந்தில் சமீபத்தில் பேசியபொழுது அங்குள்ளவர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்தார். இந்தியாவை சுவராஜ்ய வழியில் செலுத்துவதற் கேற்ற முயற்சியை யெடுத்துக் கொள்வது இந்தியர்களுக்கேயன்றி இந்தியாவில் அதிகாரம் செலுத்தும் ஆங்கிலேயர்களுடைய கடைமையாகுமென்றார். ஆனால் அவருடன் ஸம்பாஷித்த ஆங்கிலேயர்கள் அவ்வாறு செய்வதால் தங்களுக்கு இந்து தேசத்தில் தங்க மார்க்கமில்லாமற் போமென்ற பயத்தால் பீடிக்கப்படுவதாயும் சொன்னார். இவ்வாறு பயப்படுவோர் தங்களுக்குத் தற்கால பலனை யுத்தேசித்து நெடுங்காலம் உண்டாகக்கூடிய பலனை மறந்து பழம் வருங்காலத்துப் பூக்கொய்பவர் போலாவார்.

இளவரசர் இந்தியாவிற்கு வந்து போன விஷயங்களை சமீபத்தில் பேசியபொழுது, இத்தேசம் சுவராஜ்யவழியில் எவ்வளவு விரைவாய் செல்ல முடியுமென்பதைப்பற்றி வெகு சுருக்கமாகச் சொல்லிவிட்டார். இத்தேசம் கைதொழில்களில் விருத்தியடைந்து அதனாலேயே மற்றைய தேசங்களோடு ஸமானமான நிலைமைக்கு வரவேண்டுமென்பதைக் குறிப்பாகக் கூறினார். நல்ல ஸ்திதியை யடைய வேண்டியதென்று எண்ணுவதினாலும் சொல்வதினாலும் மாத்திரம் அந்நிலைமையை யடையமுடியாது. ஆங்கிலேயர்கள் தாங்கள் இப்பொழுதிருக்கும் நிலைமையை யடைய வேண்டி பட்ட கஷ்டங்களை நன்கறிந்தவர்களாதலால், கஷ்டமின்றி பேச்சினாலேயே பலனடைய எண்ணுபவர்களை மதியார். இத்தேசத்தார் தங்களுடைய முயற்சியினாலேயே தங்களிடத்திலுள்ள குறைவுகளை யொழித்து விருத்தியடைய வேண்டுமேயொழிய மற்றவர்களுடைய உபகாரத்தால் சுவராஜ்யமடைய எண்ணுவது, பிறர் நீர் அருந்துவதால் தன் தாகத்தைத் தணிக்க வெண்ணுவது போலாகும். தினவுள்ளவனே யல்லவா சொரிந்துகொள்ள வேண்டும்.

இச்சென்னை மாகாணத்து மந்திரிகள் தாங்கள் செய்து முடித்ததும் அல்லது செய்வதாக நினைத்திருக்கிறதுமான சீர்திருத்தங்களை விஸ்தாரமாக எடுத்துக் கூறுகிறார்கள். அடுத்த வருஷத்தில் மறுபடி தேசபிரதிநிதிகள் நியமனமாக வேண்டியிருப்பதால், அதற்குத் தங்களுடைய பாத்தியதையை வெளியிடுவதுபோல் காண்கின்றது. சர்க்கரை தின்பதினாலன்றி பெயர் சொல்வதனால் ருசி கொடுக்காது. சீர்திருத்தங்கள் பேச்சாலன்றி காரியத்தில் காட்டவேண்டும். தற்காலத்தில் அதிகாரமடைந்த நியாயக்கட்சிக்காரர்கள் செய்த துரைத்தன சீர்திருத்தம் ஒன்றேயாகும். அதாவது உத்தியோகத்திலுள்ள பிராமணர்களை மேலுக்கு வரவொட்டாமலடித்த தன்றி, அவர்களை உத்தியோகங்களுக்கே நியமிக்கக் கூடாதென்றதாகும். இது தற்காலத்தில் பிராமணர்கள் தங்களுக்குப் பிரதிகூலமென நினைத்தாலும் முடிவில் தேசத்துக்கு அதிக பலனையே கொடுக்குமெனத் தோன்றுகிறது. உத்தியோகங்களில் மேன்மையடைந்தது பிராமணர்களின் இயற்கை சக்திகளால் என்பதே அறிவுடையோரதபிப்பிராயம். அவ்வாறான சக்திகள் மற்ற கைத்தொழில் முதலியவைகளில் உபயோகப்படுத்தியதாலேயே இங்கிலாந்து முதலிய மேல் நாடுகள் விருத்தியடைந்திருப்பதைக் கண்டால், இத்தேசமும் அவ்வாறு விருத்தியடைவதற்கு இந்நியாயக் கட்சிக்காரர்கள் செய்தது பேருபகாரமாகும்.

ஐசுவரிய சக்கரம்

மகாத்மா காந்தி பாலபாரதத்தில் எழுதிய முப்பது வியாசங்களின் மொழி பெயர்ப்பு. இதில், மேனாட்டுச் சாமான்களை விலக்கவேண்டியது, சுதேசியத்தை விருத்திசெய்யவேண்டிய அவசியம், கைராட்டினத்தின் பெருமை, கைநூலினால் செய்யப்பட்ட ஆடையின் கௌரவம், கைராட்டினத்தில் சகலரும் நூல் நூற்கவேண்டிய அவசியம், அதனால் உண்டாகும் லாபம், கைராட்டினம் கைத்தறி இவைகள் இருக்கவேண்டிய முறை, பாவு கஞ்சிபோடும் வகை முதலிய பலவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 0—8—0

கணேஷ் கம்பெனி,

39, தம்பு செட்டி தெரு, சென்னை.

சோதிடப்புலி சோணாசலம்

[ராமசந்திரர்]

நேற்று சாயங்காலம் சுவாமி தரிசனத்திற்காக கோயிலுக்குச் சென்று குளக்கரையில் ஜபம் செய்துகொண்டிருக்கையில், அங்கு சோணாசலம் வந்து இறங்கினான்.

என்னப்பா, இரண்டு வாரமாய்க் கண்ணில் காணோம். மறுநாள் வருகிறேனென்று போனவன் திரும்பிப் பார்க்கக் கூடவில்லை.

அது ஸமாசாரம் தெரியாதா; உன்னிடமிருந்து போனவுடன் கனம் கண்ணுஸாமி அய்யரிடமிருந்து வண்டி வந்து காத்துக்கொண்டிருந்தது. அவசியம் வரவேண்டுமென்று நிர்பந்தம் செய்தபடியால் அங்கு போகவேண்டி வந்தது. அங்கு ஒரு வாரத்திற்கு மேல் காரியமிருந்தது.

அடேயப்பா, ஒரு வாரம் அங்கே புளுகுவதற்கிடம் கொடுத்தாரா அவர்? எப்படி உன் வலையிலகப்பட்டார்? அவருக்கு ஒன்றும் இனிமேல் கிடைக்க வேண்டியது பாக்கியில்லையே?

என்ன அப்படித் தெரியாமற் சொல்லுகிறாய். வேண்டாமையென்பது யாருக்குத்தான் உண்டு. துறந்த மேலோராகினும், தமது மடத்திற்காவது பொருள் சேரும் வகையில் பிரயத்தினம் செய்து என்னை வந்து கேட்காதவரில்லை. கிருஹஸ்தாச்ரமத்திலிருப்பவர்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ? கண்ணுசாமியய்யர் கிருஹஸ்தரல்லரோ? அவருக்கும் ஆசை ஒழிந்துவிட்டதெனச் சொல்ல இடமுண்டோ?

சரி, அவரையும் வசப்படுத்தியாய்விட்டதா? அவர் அதிக தெய்வபக்தி வாய்ந்தவரென்றும் உலகத்திய ஆசைகளைக்கொஞ்சம் குறைத்துக்கொண்டவரென்றும் நினைத்திருந்தேன். அவர் உனது மாயா வலையில் சிக்கிக்கொள்வாரென்று நினைக்கவில்லை. ஏதப்பா, உன் வலையில் சிக்காதவர்கள் கிடைக்குமோவென வேங்குகிறேன். மாயையின் பிரபாவம் தெரியாது நான் நினைத்தது பிசகு போலிருக்கிறது.

அடாடா! நீ சொல்லியபடி அய்யரவர்கள் பக்திமானென்று நான் நினைத்தேன். அதற்குத் தக்கபடி சொல்லியதனால்தான் அவருக்கு என்னிடத்தில் பூரணமான நம்பிக்கை வந்ததல்லாது, சோதிடத்திலும் நம்பிக்கை உண்டாகிவிட்டது. போனபொழுது நடந்த சமாசாரத்தைக் கேட்டாயானால் என்னை சாமான்யமான பொய்யனென்று சொல்லுவதை நிறுத்திவிடுவாய்.

சீ! சீ! சாமான்யமான பொய்யனென்று ஒருபொழுதும் சொல்வதில்லையே! உன் பொய்யிற்கு இவ்வுலகமே போதாதென்றல்லவா சொல்லுகிறேன். திருமால் தன் காலாலளந்த உலகமெல்லாம் நீ மனதில் நினைந்து சொல்லும் பொய்யால் அளக்க வல்லவனெனவே மதித்திருக்கிறேன். உன் பொய்க்கும் எதிருண்டோ? நல்லது அங்கு நடந்த விருத்தாந்தத்தை சுருக்கமாய்ச் சொல்லேன். கேட்போம்.

அப்படிக்கேள், சொல்லுகிறேன். நான் போய் உட்கார்ந்தவுடன் கண்ணுசாமி அய்யர் அவர்கள் ஜபதபங்களை முடித்து, விபூதியணிந்த நெற்றியும் ருத்திராக்ஷமாலையணிந்த மார்பும் விளங்க, புன்சிரிப்புடன் உள்ளிருந்து வந்து உட்கார்ந்தார். பிறகு என்னை சாதாரணமாக குசலப்பிரச்னம் செய்துவிட்டு, சோதிடத்தில் தனக்கு நம்பிக்கையில்லையென்பதைக் குறிப்பிட்டார். அக்குறிப்பை யுணர்ந்தும் அறியாதவன் போல் சோதிடத்தின் மகிமையையும் பெருமையையும்பற்றி மிதமாகச் சொல்லிக்கொண்டிருக்கையில், உட்புறத்திலிருந்து அய்யரவர்கள் சம்சாரம் மெதுவாயங்கு வந்து, அவரை ஜாதகத்தை என்னிடத்தில் காட்டச்சொல்லி தூண்டவும், அதற்கிடங்கொடாது அவர் முகஜாடை காட்ட, நான் அவ்விடத்தில் சொன்னேன். 'மற்றைய ஜோதிடர்களைப்போல் எனக்கு ஜாதகம் வேண்டுவதில்லை. தங்களைப் பார்த்தவுடன் தங்கள் ஜாதகமிப்படிப்பட்டதென்பதும், கிரஹ நிலைகளும் எனக்கு புலியர் அருளால் தெளிவாகும். இப்பொழுது வேண்டுமானால் நான் தங்களுக்குரித்தானபடி சாஸ்திரத்தில் சொல்லியதை எடுத்துக் கூறுகிறேன். கொஞ்சம் பொறுமையோடு கேட்கவேண்டு'மென்று சொல்லி, பின்வரும் பாடலை சனி நாடியிலிருந்து எடுத்துரைத்தேன்.

வில்லே தானுதயமாகி வியந்தனிலே வியாழன் நிற்க,
பல்லோர் புகழ் பரிதிதானும் பங்குவொடு பத்திற் சார,
சொல்லவுமே சுதனைக்காணோம் சுடலைத்தனிற் கபால
[மேந்தி,
எல்லியிலே நடமாடும் இறையவனுக்கடிமை காணே.

இதைக்கேட்ட அய்யரவர்கள் தன் மனைவியை நோக்க, அம்மாளும் அவர் கையில் ஜாதகத்தைக் கொடுத்தாள். அதை வாங்கிப்பார்த்து, அதில் நான் சொன்ன கிரஹ நிலைகள் சரியாயிருக்கக் கண்டு பிரமித்து, எப்படி இந்நிலையை நான் தெரிந்துகொண்டேன் என்று கேட்டார். அப்பொழுது 'சுவாமி, நான் இயக்ஷிணியினுதவியால் இவ்விஷயங்களைத்தெரிந்து கொள்பவனென நினைக்கவேண்டாம். தாங்கள் எக்கடவுளை மனதில் எப்பொழுதும் தியானித்துக்கொண்டிருக்கிறீர்களோ, அவ்விறைவனே என் மனதிலும் குடிகொண்டிருக்கிறான். அவனாலருளப்பெற்ற சாஸ்திரமே யன்றோ நான் உரைப்பது. அவனறியாதபொருளுமுண்டோ? அவனருள்பெற்ற எனக்கு மறைத்து வைக்கவும் கூடுமோ? நான் கூறுவதெல்லாம் அவ்விறைவனருளே யென்றெண்ணுங்கள். பின்னும் தங்களுக்கு பரமசிவனிடத்திலுள்ள பக்தி விசேஷத்தை யறிந்துகொண்டேனாகையால், யாவரும் அறியாத சில விஷயத்தை தங்களிடத்தில் சொல்லவேண்டுமென்றாவல் கொண்டேன். அரிய மறைப்பொருள்களை யடக்கி அரனை நோக்கி சமயாசாரியர்கள் அருள் வாக்கினின்றும் வெளிப்பட்ட பாமாலைகளில் நமக்குக் கிடைத்திருப்பது சிறிது பாகமே யென்பதும், அநேக பாகங்கள் மறைந்துவிட்டன வென்பதும் தங்களுக்குத் தெரியாததல்லவே. அவைகளிற் சில அனல் கையேந்திய வரனருளால் எனக்குப் புலப்பட்டுள்ளன. அவைகள் பிறரறியாரென்பது நான் சொல்லாமலே விளங்கும்' என்று சொன்னவுடன், அய்யரவர்கள் அன்பு மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் விட்டு மெய்சிலிர்த்து உள்ளமுருகி, 'அப்படியா, அவைகளில் யாதானும் ஒன்றை அருளவேண்டு'மென வேண்டினார். அப்பொழுது நானும் அய்யரவர்களைப்பார்த்து கண் மூடித்தியானித்திறைவனருளை முன்னிட்டுக் கூறினேன். 'திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளிய திருநேரிசைகளைக் கேட்டிருக்கலாமே. திருநாவலூரார் இசைத்த திருநேரிசைக் கேட்டதுண்டோ? சுவாமிகள் திருவொற்றியூரில் சங்கிலியாரைக் கண்டு பின் தொடர்ந்து சென்றபொழுது அவரது அழகிலீடுபட்டு எம்பெருமானை நினைந்து துதித்தது இப்பொழுது ஞாபகத்திற்கு வந்தது சொல்லுகிறேன்.

காலிலே செருப்பணிந்து கையிலே குடையுமேந்தி
சாலையிற் தொடர்ந்து சென்று சாவடி யடையும்போது
சேல்விழி மாதராளைச் சேரவே யெண்ணி மேலும்,
மேலுமே நினையும் வண்ணம் அருளுவாய் அமரர்
கோவே.

நான் இசையோடு இப்பாசுரத்தைப் பகர்ந்தவுடன், அய்யரவர்கள் அடங்காத ஆனந்தமடைந்து, தன்னைத் தடுத்தாட்கொண்ட இறைவனிடத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குள்ள ஸ்நேகபாவத்தையும் நம்பிக்கையையுமே எண்ணி எண்ணி மனமுருகி நின்றார். அதுமுதல் என்னிடத்திலய்யாவர்களுக்கு ஏற்பட்ட பிரியத்திற்களவேயில்லை. என்னை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் பத்து நாள் வரையில் என்னை யங்கு நிறுத்திவிட்டார். எல்லாம் புலியாருளே யாகும்.

இவைகளையெல்லாம் கேட்ட நானும், மூடபக்தியின் மகத்துவத்தையும் சோணசலத்தினுடைய வாக்குவல்லமையையும் வியந்து கொண்டாடி, 'அப்பா நான் உன் பொய்யின் திறமை யறிந்திருந்தும் உன்னை சாமான்யமான மாந்தர்கள் வெல்வரென நினைத்தது பிசகு. மாயைக்கெல்லாம் அதிபதியாகிய கடவுளே மாயையில் மயங்கிக் கிடப்பாரானால், மாந்தர்களின் நிலையை சொல்லவும் வேண்டுமோ' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், கோயிலில் தீபாராதனைக்கு மணியடித்தது. உடனே சோணசலம் 'அய்யரவர்கள் கோயிலுக்குள்ளிருப்பார். நான் போய் பார்க்க வேண்டு'மென்று சென்றான். நான் இவனது பொய்யின் திறமையைக் கண்டு கோயிலுக்குள்ளே செல்ல மனமில்லாதவனாய் வீடு சென்றேன்.

நமது பாகவதர்

[Y. மஹாலிங்க சாஸ்திரி, M.A., B.L.]

கிராம வாஸிகளுக்கு நமது பாகவதரை நன்றாய்த் தெரியும். தற்காலத்தில் பாகவதரென்று சொன்னால், ஸன்மானத் தொகையைப் பேசிக்கொண்டு, சரியாய் மூன்றுமணி நேரம் ஸங்கீத ஸபைகளில் லௌகீக காலக்ஷேபங்கள் செய்யும் பாகவதர்களையே நம் மனம் நினைக்கத் தொடங்குகிறது. ஆனால் ஆராயுமிடத்து, ஈசுவர கதாப் பிரஸங்கத்தை ஒரு லாபகரமான தொழிலாகக் கொண்டவர்களுக்கு இந்தப் பெயர் புராதனமாய் வழங்கப்பட்டு வரவில்லை. பாகவதன் என்ற பதத்திற்கு "பகவத் பக்தன்" என்று பொருள். ஓர் உண்மையான பாகவதர் ஈசுவர பஜனத்தில் ஈடுபட்டவராய், வேறு புருஷார்த்தங்களை நாடுவதில்லை. ஜடவுலக பலன்களுக்காகப் பற்பல வேஷம் பூண்டு, ஆயுள்ளளவும் பந்தயக் குதிரைபோல் ஓடி ஓடிச் சாகும் மானிடக்கும்பலில், இவர் ஒருவர் அல்ல. இவர் கானலைக் கண்டு தெளிந்த தண்ணீரென்று பிரமிக்கமாட்டார். பணத்தாசையையும் உலகப்பற்றையும் ஒழித்தவர். ஆனால் ஸன்யாஸியல்ல. அவர் ஓர் குடும்பி. அனேகமாய் அவருக்கு சம்சாரம் அதிகமாகவே இருக்கும். வறுமையும் அவரிடம் குடிகொண்டிருக்கும். உலகத்தில் இது ஸஹஜ மல்லவா? கடவுள் பரீட்சிப்பதுபோல் ஏழைகளையே பெரிய குடும்பிகளாய் வைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். நமது பாகவதருக்கு குடும்ப பாரம் அதிகமாயும், ஏழ்மை கடுமையாயும் இருந்துகொண்டிருப்பதால், அவருடைய ஈசுவரபக்தி மேலுக்குமேல் பலப்படுகிறது. அவர் பரமாத்மாவிடத்தில் தம் குடும்ப பாரத்தை ஒப்புவித்துவிட்டுச் சிந்தைவிடுத்து இருக்கிறார். தன்னையே ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துகொண்டுவிட்டார். தமக்கோர் குழந்தை யுண்டானால், கடவுளுக்குத் தம்மால் ஓர் அடிமை கூடினானென்று மகிழ்வார். அவர் தம் குழந்தைகளின் க்ஷேமத்தைக் கோருவதுபோல், ஊராரின் க்ஷேமத்தையும் வேற்றுமை யின்றிக் கோருவார். "லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து" என்பதுதான் அவருடைய தினசரி பிரார்த்தனை. அவருக்கு சத்துருக்கள் உண்டானதில்லை. அவர் பிள்ளைப்பூச்சி போல் ஒரு ஸாதுவான ஆத்மா. அவரால் யாருக்கும் உபத்திரவம் கிடையாது. யாரையும் அவர் கொடு என்று கேட்பதில்லை. தாம் ஈசுவர பஜனை செய்துகொண்டு வரும்போது யாராவது கூப்பிட்டுக்கொடுத்ததை நன்றியுடன் பெற்றுகொள்வார். நமது பாகவதர் மனுவினால் விதிக்கப்பட்ட பிராம்மண தர்மத்தைத் தவறாமல் அனுஷ்டிப்பவர். பிறரை வருத்தாமல் கிடைத்த பதார்த்தங்களை கொண்டு இவர் திருப்தியாய் காலக்ஷேபம் செய்கிறார். வருங்காலத்திற்கு உதவும்படி இவர் சேர்த்து வைப்பதில்லை. இவர் தாமரையிலையில் விழுந்த நீர்த்துளிபோல் பற்றற்று உலக வாழ்க்கையில் இருந்து வருகிறார். இவர் வசிக்கும் கிராமமே இவரால் புனிதமாகின்றது. பக்தி புகட்டும் திவ்ய கீர்த்தனங்களை இவர் மனமுருகிப் பாடிக்கொண்டு வீதிகளில் வருங்கால், பாமர ஜனங்கள் கூடச் சற்று மெய்மறந்து, ஈசுவரனை ஸ்மரிக்காமலிருக்க முடியாது.

நமது பாகவதருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். அவர் சரீரத்தைச் சலுகையுடன் வளர்க்காதவரானதால் மிகுந்த திடத்தன்மை யுள்ளவர். அவர் வைதீக யாசகத்திற்கு போவதில்லை. ஒருவாறு அவரை வித்வானென்றே சொல்லலாம். மனத்தைச் சன்மார்க்கத்தில் பிரவர்த்திக்கச் செய்ய சாதகமான பாண்டித்யம் அவருக்கு உண்டு. அதற்கு மேற்பட்ட படிப்பை அவர் விரும்பவுமில்லை. புராணங்களில் அவருக்கு பரிசயம் அதிகம், கீதையும் அடிக்கடி பாராயணம் செய்வதால் முகஸ்தமாயிருக்கும். தவிரவும் அவர் மிகுந்த ரஸிகர். ஸங்கீதத்தில் நல்ல நிபுணர். அஷ்டபதி பாடுவதில் இவருக்குச் சமானமானவர் கிடையாது. நமது பாகவதர் எப்போதும் சந்தோஷமான முகக் குறிப்புடன் காணப்படுவார். ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் நாடியிருக்கும் அவர் மனத்தில் துக்கம் என்பது எட்டிப்பார்க்கவும் அஞ்சுமல்லவா?

காலை எட்டு மணிக்குள் தம்முடைய அனுஷ்டான பாராயணாதிகளை முடித்துக்கொண்டு நமது பாகவதர், உஞ்சவிருத்திக்குப் புறப்படுவார். எவ்வளவு வெயில் காலமாயிருந்தாலும் குடைஜோடுடன் இவர் வருவதில்லை. ஆனால் தலையில் ஒரு தலைப்பினால் சுற்றப்பட்டு முழங்கால் வரையில் விரிந்து தொங்கும் பட்டு வஸ்திரம் ஒன்றை இவர் தரித்துக்கொண்டிருப்பார். இவரது வலதுதோளிலிருந்து, ஒரு பித்தளைச்சொம்பு தொங்கிக்கொண்டிருக்கும். இதில் தான் இவர் அக்ஷதையைப் பெற்றுக்கொள்வது. நெற்றியிலும், மார்பிலும், புஜங்களிலும், கட்டுக்கட்டாய் அணிந்துகொள்ளப்பட்ட விபூதியுடனும், கண்ட பிரதேசத்தில் விளங்கும் பெருத்த ருத்திராக்ஷ மாலையுடனும், நமது பாகவதர் அப்போதே உதயமான ஸூரியனைப்போல பிரகாசிப்பார். அவர் ஆத்மானுபவத்துடன் ரஸபரிதமான ஜயதேவ ஸ்வாமியின் கிருதி

களை கம்பீரமாயும் இனிப்பாயும் கேட்போர் ஆனந்திக்கும்படி பாடிக்கொண்டு வருவார். லயத்திற்கனுகுணமாய் அவருடைய கையில் கலீர் கலீர் என்று சப்தித்துக்கொண்டிருக்கும் ஜாலர் அவர் வரவை முன்னதாகவே தெருவிலுள்ளோருக்கு அறிவித்துவிடும். இந்த சத்தத்தைக் கேட்டவுடன் சிறு பெண்கள் தம்தம் தாய்மார்களால் எடுத்துக் கொடுக்கப்பட்ட அக்ஷதையை படியில் ஏந்திக் கொண்டு குதூகலத்துடன் தெருவில் வந்து நிற்பார்கள். நமது பாகவதர் புன்னகையுடன் அவர்களுக்குச் சீக்கிரம் விவாகமாகவேண்டுமென்று ஆசீர்வதிப்பார். அந்தச் சமயத்தில் அச்சிறுமிகள் "தாத்தா பொல்லாத்தனத்தைப் பார்" என்று முகத்தை சுளுத்துக்கொண்டு முறுமுறுத்தாலும் மறுநாளும் தாங்களே அக்ஷதையும் கையுமாய்க் காத்திருப்பார்கள். விருத்தைகளாயிருந்தால் நமது பாகவதரை பிரதக்ஷணம் செய்து நமஸ்கரித்து பக்தியுடன் அவருக்குக் கறிகாய் முதலிய உபகரணங்களையும் கொடுப்பதுண்டு. இப்படி வீதியைச் சுற்றிவரும்போது, இவர் சிலசமயம் தம்மை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கிருஹஸ்தர்களிடம் தர்மசாஸ்திரம் பொதுநன்மை முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டோ, அல்லது ஸுகமடைந்தவர்களை அனுமோதனம் செய்துகொண்டோ, துக்கிகளைத்தேற்றிக்கொண்டோ, சற்று நின்றுவிடுவார். அத்தருணம் பார்த்திருந்து குறும்புள்ள சிறுவர்கள் இவரால் கையிலிருந்து தற்செயலாய் கீழே வைக்கப்பட்ட ஜாலர்களை எடுத்துக் காது செவிடாகும்படி கொட்டிக் கொண்டு கூத்தாடுவார்கள். நமது பாகவதருக்குச் சுபாவமாய்க் கோபமென்பதே கிடையாது. அதிலும் சிறுபிள்ளைகளின் விநோதச் செயல்களைக் கண்டு அவர்களிப்புறுவாரே யொழிய, வெறுப்படையமாட்டார்.

நமது பாகவதர் ஸமயோசித புத்தி யுள்ளவர். பெரிய விருத்தர்களையும், வித்வான்களையும் கண்டால், நடுவில் கொஞ்சம் கீதாப்பிரஸங்கம் செய்துகொண்டு வைராக்கியத்தைப் புகழ்வார். ஸங்கீத ரஸிகர்கள் சற்று ராகாலாபனம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தால், அதையும் மறுக்கமாட்டார். இவர் காம்போஜியில் "பிரதம ஸமாக லஜ்ஜிதயா" என்ற பதத்தை எடுத்துப் பாடும்போது, யுவபுருஷர்கள் அது முடியும்வரையில் அக்ஷதை போடுவதைத் தாமதப் படுத்திக் கொண்டு வெகு ரஸமாய் கேட்டுக்கொண்டிருப்பார்கள். நமது பாகவதர்களைக் கீர்த்தனம் பாடச் சொன்னால், தீக்ஷிதர் கிருதிகளில் ஒன்றை எடுத்து, வெகு ஸௌகமாய் பாடத் தொடங்கிவிடுவார். அவருக்குக் கர்ணாடகத்தைத்தவிர நவீனமே ஒன்றும் தெரியாது. இவ்விதமாகக் கேட்போரை யனுசரித்து அவர் பாடினாலும் சாதாரணமாய் அஷ்டபதிதான் பாடுவது வழக்கம்.

நமது பாகவதர் தயாளகுணமும் சாந்தகுணமும் நிரம்பியவர். இவரிடத்தில் கிராமவாசிகளுக்கு தேவதா விசுவாசம். இவரில்லாமல் ஒருகிருஹத்திலும் விசேஷக்கொண்டாட்டங்கள் நடத்தப்படமாட்டா. இவரும் அன்பு பெருகும் தம் உள்ளத்தில் அக்கிராம மனைத்தையும் தம் குடும்ப மாக பாவிக்கிறார். ஒரு நாளைக்கு அவரைக் காணா விட்டாலும், ஊர் வெறிச்சென்றாகிவிடும். சிலசமயம் கிராமவாசிகள் இவரிடத்தில் புராண சிரவணம் செய்வதுமுண்டு. அப்போது அவர் பக்திசாகரத்தில் ஆழ்ந்து விடுவார். விசேஷமாய் குசேலோபாக்யானம் சொல்வதில் இவருக்குப் பிரவிருத்தி யுண்டு. உண்மையில் குசேலரைப் போல் ஏழ்மையும், பக்தியும், வைராக்கியமும் பொருந்தியவராதலால் அச்சரித்திரத்தில் இவருக்கு அசாதாரணமான மன உருக்கமும் அனுபவமும். இருக்கக்கூடும். மேலும் அடிக்கடி நமது பாகவதர் ஸ்ரீராமநவமி, கோகுலாஷ்டமி, ராதா கல்யாணம் முதலிய உத்ஸவங்களை நடத்தி பஜனை மார்க்கத்தைப் பிரகாசம் செய்துகொண்டிருப்பதால் அவரிருக்குமிடத்திலேயே, ஈசுவர பக்தியில்லாதவன் கிடையாது. இவ்வளவு சாந்த ஆத்மாவான நமது பாகவதரே, ஜன்மமெடுத்தவர்களுக்குள் பரமதன்யர். மோக்ஷஸாதனங்களுக்குள் கலியுகத்திற்கு விதிக்கப்பட்ட பக்தி மார்க்கத்தை இவர் அனுஷ்டித்து வருகிறார். லோகத்தினுடைய முகோல்லாஸத்தையும் ஸம்மானத்தையும் எதிர்பார்க்காமல் கடவுள் ஒருவரையே இவர் தமக்கு ஸேவ்யராகவும் ரக்ஷகராகவும் அங்கீகரிக்கிறார். அதனால் தான் இவர் ஸர்வ ஜனங்களுக்கும் பூஜ்ய ராகிறார். பொருளீட்டுவதில் ஆசையுள்ளவர்கள் தங்களுடைய அஸூயை, அகங்காரம், ஆவல் முதலிய மனோவிகாரங்களால் பிறரை விலக்கிவிட்டுத் தம் காரியமே தமக்குப் பெரிதென்று தலையில் சுமந்துகொண்டு திரிகிறபடியால் அவர்கள் விஷயத்தில் உலகத்தார் அகாரணமாய் இரங்குவதில்லை. ஆகாரத்தின் பொருட்டு பிறருடன் போட்டிக்கு வராமல், அவாவை யொழித்து திருப்திசாகரமாய் விளங்கும் நம் பாகவதரிடத்தில் ஸஹஜமாய் ஜனங்களுக்கு பிரீதி உண்டாகிறது. வேற்றுமை உணர்ச்சிக்கும், நிந்திக்கத்தக்க மனோபாவங்களுக்கும் மூல காரணமான லோபம் என்ற பிசாசை அணுகவிடாத நமது பாகவதருக்கும் ஸர்வ பிராணிகளிடத்திலும் கருணையால் பந்து பாவனை நிலைத்திருக்கிறது. நிர்மலமான இவர் மனதில் கவலை சிறிதும் உதித்ததில்லை. பணத்தை ஸம்பாதிப்பதிலும் சேர்ப்பதிலும் ஆத்திரமுள்ளவர்களுக்கல்லவா கவலைகள் ஹிருதயத்தைத் துளைக்கின்றன.? அஹரஹநி காலக்ஷேபத்துடன் திருப்தியடைந்து ஒரு நாள் முன்னதாக சேர்த்து வைப்பதிலுங்கூட உதாஸீனமாயிருக்கும் நமது பாகவதருக்குக் கவலை எங்கிருந்து வரும். இவ்வளவு நிவிருத்தராயிருந்தால் குடும்ப ஸம்ரக்ஷணம் எப்படி நடக்குமென்று நீங்கள் கேட்கலாம். ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் 'என்னிடத்தில் பக்தி மிகுதியால் ஆத்மார்ப்பணம் செய்து விட்டவர்களின் யோகக்ஷேமத்தை நான் வஹிக்கிறேன்' என்று உலகம் அறிய, பிரதிக்ஞை செய்திருக்கின்றார். அந்த வாக்கியத்தை நமது பாகவதர் முற்றிலும் நம்பினவர். அவர் விஷயத்தில் அந்த நம்பிக்கை இது வரையில் வீண் போகவில்லை.

குலமாதர் கும்மி

[சம்பதாஸர் A. R. ஸுப்ரஹ்மண்யய்யர்.]

(All Rights Reserved)

1. கும்மியடி பெண்கள் கும்மியடி—நல்ல
குலமாதர் பண்படக் கும்மியடி
நம்முடைய தேசத்துப் பெண்களுமே—மிக்க
நலம் பெறக் கும்மியடியுங்கடி.

2. பாரத நாடு செழித்திடவே—நல்ல
பண்புள்ள மாதர் தழைத்திடவே
ஊரெங்கும் நம்மை யுயர்த்திடவே—மிக்க
ஒழுங்குடன் பாடியடியுங்கடி.

3. குஞ்சர முகத்தவனை மனதிலெண்ணி—நம்
 கோரிக்கை யீடேறக் கும்மியடி
நெஞ்சினில் வாணியை நினையுங்கடி—யவள்
 நின்மலப் பாதங்கள் பணியுங்கடி.

4. பாரத மாதாவைத் துதியுங்கடி—யவள்
 பதம்பற்றி வாழவே பணியுங்கடி
தீராத கஷ்டங்கள் தீருமடி—மனந்
 தேறி யுற்சாகமும் சேருமடி.

5. கல்வி நமக்குமே வேண்டுமடி—மனக்
 கவலைகள் நம்மை விட்டுத் தாண்டுமடி
செல்வமு நாட்டினிற்றங்கும்படி—நல்ல
 சீரும் சிறப்புமே பொங்குமடி.

6. ஆஸ்திகமுள்ள நன்னாடாச்சே—யிதில்
 சாஸ்திரங் குப்பைகள் தானாச்சே
நாஸ்திக முறைகளை யொழித்திடுவோம்-நல்ல
 சாஸ்திரமுறைகளாற் பிழைத்திடுவோம்.

7. மனைவளர்க் கல்வியை மதிப்போமடி—யதை
 மனதில் நன்றாகப் பதிப்போமடி
தினைப்பொழுதாகிலும் படிப்போமடி—நிதம்
 தெய்வசிந்தனைகளைப் பிடிப்போமடி,

8. ஆயிரங்கொட்டி யரைப்பண உத்யோகமாருக்
 கவசியமப் பிராணத்யாகம்
நாமென வுழைத்தாலு மனைமாக்ஷி—யிங்கே
 நமக்கது போதாதோ கண்காக்ஷி.

9. ஆடவராயிரங் கொணர்ந்தாலும்—நமக்
 காஸ்திகளாயிரங் கிடந்தாலும்
பாடுகள் பட்டதைக் காத்திடுவோம்—நம்
 பண்டங்கள் சிதறாமற் பார்த்திடுவோம்.

10. குழந்தைகள் நன்றாக வளர்த்திடுவோம்-நல்ல
 குடும்ப சுகாதாரம் படித்திடுவோம்
பிழைத்திடும் கல்விகளவர்க்குரைப்போம்-நம்
 பெருமைகள் சேரவே யெடுத்துரைப் போம்.

11. மூத்தோர் சொல்வார்த்தை மதித்திடுவோம
 முக்காலு மனதிற் பதித்திடுவோம் [தை
தூற்றிடுஞ் செயல்கள் மறந்திடுவோம்—நல்ல
 துதித்திடுஞ்செயல்கள் பொருந்திடுவோம்.

12. கணவரைக் கண்போலக்காத்திடுவோம்-அவர்
 காரியங்குறைவின்றிப் பார்த்திடுவோம்.
பணமே பெரிதென்று பாராமலவர்
 குணமே குறியென்று கோரோமோ.

13. வருவாய் பார்த்துச் செலவிடுவோம்—நாம்
 வந்த பின்னெதையுங் கணக்கிடுவோம்
வரவுக்கு மிஞ்சிச் செலவிடுவாரவர்
 வாழ்வு குறைந்து நிலை கெடுவார்.

14. மேனாட்டு முறைகளைப் பார்ப்போமே--யதில்
 மேன்மையிருந்தால் சேர்ப்போமே
கீழ்நாட்டு முறைதனை யளைவோமே--யதில்
 கெடுதிகளிருந்தாற் களைவோமே.

15. குடும்ப கலகத்தை யொழிப்போமே—யிங்கு
 கூட்டுற வின்பத்தில் செழிப்போமே.
நாடெங்குங் கூடக் களித்திடுவோம்—நம்
 நாடு செழிக்க வுழைத்திடுவோம்.

16. அறிவு வளரப் படித்திடுவோம்—மிக
 அருமையாகநன்மை கைப்பிடித்திடுவோம்
சிறுமைகள் நீங்கிச் சிறந்திடுவோம்—பொல்
 லாதவர் கேண்மை மறந்திடுவோம்.

17. ஜீவ காருண்ய மறிந்திடுவோ மெல்லா
 ஜீவனு மொன்றாய்த் தெரிந்திடுவோம்
பாவபுண்யங்கள் பகுத்தறிவோம்—நல்ல
 பக்குவ நெறிகள் மிகுத்தறிவோம்.

18. நீதி நெறிகளை முழக்கிடுவோம்—நன்றாய்
 நித்தமவைகளைப் பழக்கிடுவோம்.
சூதுவாதுகளெல்லா நீக்கிடுவோம்—நல்ல
 சுத்த சன்மார்க்கங்க ளாக்கிடுவோம்.

19. வேதமுறைகளை மதித்திடுவோ மன்றி
 வேறுமுறைக ளொழித்திடுவோம்
போதமுறு செயல் பற்றிடுவோம்—நல்ல
 புண்ணியன் றாள்களை யுற்றிடுவோம்.

20. கம்பதாஸன் கும்மி கற்றிடுவோம்—குணம்
 கனமுற வெண்ணிக் கைப்பற்றிடுவோம்
கும்மியடித்து சீர் பெற்றிடுவோம்
 குலமாதர்கள் வாழ்வையே நற்றிடுவோம்
 கும்மியடி பெண்கள் கும்மியடி
 குலமாதர்கள் வாழவே கும்மியடி.

புயற் காற்று

[V. நாராயணய்யர் M. A. M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நத பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய,அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு,உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய,கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்லியாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்ததும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

'இராமேசா, யார் இவள்' என்று கேட்டான் யோகேந்திரன்.

இராமேசன்: 'எனக்கு உறவு.' 'என்ன உறவு?' என்று யோகேந்திரன் 'உனக்குப்பெரியவள் அல்லவே இவள்? சிநேகத்தால் உண்டான உறவாயிருக்காது என்றும் நினைக்கிறேன். உன் உறவினர் எல்லாரையும்பற்றி என்னிடம் சொல்லி இருக்கிறாயே. இவளைப்பற்றி மட்டும் சொன்னதில்லையே.' 'இதென்ன யோகா' என்று அக்ஷயன் இடையிற் புகுந்து,

'தன் பிரிய சிநேகிதர்களிடமிருந்து கூட இரகசியமாய் மறைத்துவைக்கவேண்டிய விஷயங்கள் இராதா?' என்று சொல்லவே,

'என்ன, இராமேசா, இது அவ்வித இரகசியமா, என்ன?' என்று யோகேந்திரன் வினவினான்.

இராமேசன் முகம் சிவந்தது. 'ஆம்; இரகசியந்தான்; இவளைப்பற்றி உன்னிடம் பேச எனக்கு இஷ்டமில்லை.'

யோகேந்திரன் உடனே ஆத்திரத்துடன்: 'ஆனாலும் எனக்கு இதைப்பற்றி உன்னிடம் பேசவேண்டியது அவசியமாயிருக்கிறதே; ஹேமநளினியை நீ மணப்பது என்ற தீர்மானத்திற்கு வராதிருந்தால் உன் குடும்பத்திலுள்ள உற்றார்களைப்பற்றி நான் கவலைப்படப் போகிறதில்லை. உன் இரகசியங்களைப் பற்றி தூண்டிக் கேட்க மாட்டேன்.'

இராமேசன்: 'இதைமட்டும் நான் உறுதி கூறுவேன், யோகா; மனச்சாக்ஷிக்கு விரோதமானதாய் ஹேமநளினியை நான் மணப்பதற்குத் தடையான யாதொரு காரியமும் நான் செய்யவில்லை என்று.'

யோகேந்திரன்: 'உன் மனச்சாக்ஷிக்கு விரோதமான தடையொன்றும் தோன்றாமலிருக்கலாம்; ஆனால் ஹேமநளினியின் உறவினருக்கு அதே விஷயம் வேறுவிதமாகத் தோன்றுகிறதே. நான் இதைமட்டும் கேட்கிறேன், சொல்லிவிடு—இவள் உனக்கு உறவோ அல்லவோ? இவளை ஏன் இங்கே இப்படி ஒளித்து வைத்திருக்கிறாய் என்று மட்டும் சொல்லிவிடு.'

இராமேசன்: 'இதைச் சொன்னால் இரகசியம் வெளிப்பட்டுவிடும்; என் வார்த்தையை நம்பி இப்படி தூண்டிக்கேட்காதிருக்கக் கூடாதா?'

யோகேந்திரன்: "இவள் பெயர் கமலா தானே?"

இராமேசன்: 'ஆமாம்.'

யோகேந்திரன்: 'இவளை எங்கேயாவது உன் மனைவி என்று கூட்டிக்கொண்டு போனதுண்டா?'

இராமேசன்: 'உண்டு.'

யோகேந்திரன்: "அப்படியிருக்க, நான் உன்னை நம்புவது சாத்தியமா? அவள் உன்மனைவி அல்ல என்று எங்களை நம்பச்சொல்லுகிறாய். ஆனால் நீயே எல்லாரிடத்திலும் அவளை உன் மனைவி என்று அறிவித்திருக்கிறாய். நீ பேசுவது உண்மையென்று எப்படி நம்புவது?'

அக்ஷயன்: 'இதென்ன, யோகா, நீ சொல்வது; இவ்விதம் பேசுபவனை சத்தியசந்தன் என்று ஒரு உதாரணமாக பள்ளிக்கூடத்தில் எடுத்துக் காட்டிப் பேசமாட்டார்கள் என்றாலும், உலகானுபவத்தில் வெவ்வேறு மனிதரிடம் வெவ்வேறு விதமாகச் சில அசந்தர்ப்பங்களில் சொல்லவேண்டி இருக்கும். அப்படிச் சொல்லும் பேச்சுகளில் ஒன்று நிசமாகவும் ஒன்று பொய்யாகவும் இருக்கலாம். ஒரு வேளை, இராமேசபாபு இப்பொழுது உன்னிடம் சொல்வது உண்மையாக இருக்கக்கூடாதா என்ன?'

இராமேசன்: 'நான் ஒருவரிடம் ஒன்றையும் சொல்லப்போகிறதில்லை. ஹேமநளினியை மணப்பதற்கு இடையூறாக நான் ஒரு பாபத்தையும் செய்யவில்லை என்றுமட்டுமே சொல்லக்கூடும். கமலாவின் செய்திகளை உங்களிடம் சொல்லமாட்டேன் என்று நான் இவ்விதம் மறுதளிப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. என் தற்கால நடத்தை அதிக சந்தேகத்திற்கு இடங்கொடுத்தாலும் நான் அவளுடைய விஷயங்களை வெளியிடமுடியாது; என் மானமும் மன அமைதியும் மட்டும் குலையும் என்று தோன்றினால் நான் சொல்லாதிருக்க மாட்டேன். உங்களிடமிருந்து ஒன்றையும் ஒளிக்க மாட்டேன். ஆனால் இது பிறர் வாழ்நாட்களையும் கெடுக்குமென்றே நான் பேச மாட்டேன் என்று மறுப்பதற்குக் காரணம்.'

யோகேந்திரன்: 'ஹேமநளினியிடமாவது எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாயா?'

இராமேசன்: 'இல்லை; கல்யாணமான பின் சொல்வதாய் உத்தேசித்திருக்கிறேன்; அவள் வேண்டுமென்றால் இப்பொழுதே தெரிவிக்கிறேன்.'

யோகேந்திரன்: 'சரி, இதைப்பற்றி நான் கமலாவை சில கேள்விகள் கேட்கலாமோ?'

இராமேசன்: 'கூடாது; நான் குற்றவாளி என்றுனக்குத் தோன்றினால் அதற்கு தகுந்த தண்டனையை எனக்கு விதி, ஆக்ஷேபணையில்லை. கமலா யாதொரு குற்றமும் அறியாதவள். அவளைக் காட்டிக்கொடுக்க மாட்டேன்.'

யோகேந்திரன்: 'ஒருவரையும் கேள்வி கேட்க வேண்டிய அவசியமில்லை. தெரியவேண்டியதையெல்லாம் நான் தெரிந்து கொண்டாயிற்று; நீயும் வேண்டியவற்றை சொல்லி விட்டாய். இனி எங்கள் வீட்டில் காலடி எடுத்து வைத்தால் அவமானப்படுவாய் என்று அறிந்து கொள்.'

இராமேசனின் முகம் வெளுத்தது; ஆனால் வாய் திறக்கவில்லை. யோகேந்திரன் மேன்மேலும் பேசினான்: 'இன்னும் ஒன்று சொல்லுகிறேன், கேள். நீ ஹேமநளினிக்குக் காகிதம் ஒன்றுமே எழுதக்கூடாது. அவளோடு பேசவும் கூடாது; ஒளிந்தோ, வெளிப்படையாகவோ அவளுக்கு நீ சொல்லியனுப்பவும் கூடாது; அவளுக்குக் காகிதம் எழுதினால் உடனே உன் இரகசியத்தை எனக்குக் கிடைத்திருக்கும் ருசுவுடன் பகிரங்கமாக வெளிப்படுத்துவேன்; இப்பொழுது, யாரேனும், ஏன் ஹேமநளினியின் கல்யாணம் நடக்கவில்லை என்றால், இந்தக் கல்யாணம் எனக்குச் சம்மதம் இல்லை, அதனாலேதான் நின்றுவிட்டது என்று சொல்லி விடுகிறேன். உண்மையை உரைக்கவில்லை. ஆனால் நீ மட்டும் ஜாக்கிரதையாக என் சொல்படி நடக்கவில்லையானால், முழுக்கதையையும் வெளியிடுவேன். இவ்விதமாய் நீ சற்றும் மானமில்லாமல் நடந்தபோதும், நான் ஏன் இப்படி பொறுமையுடன் இருக்கிறேன் என்று ஆச்சரியப்படலாம்; அதற்குக்காரணம் உன்மீது தயவு அல்ல; என்சகோதரியை யொட்டின விஷயமாயிற்றே என்று தான் உன்னை இவ்விதம் இலகுவாய் விட்டுவிட்டேன். உனக்கு ஹேமநளினியைத் தெரியும் என்றுகூட பிறரறியாவண்ணம் நீ நடந்து கொள்ளவேண்டும். உன்னிடமிருந்து அவ்விதம் நடக்கிறேன் என்று வாக்கு வாங்குவதில் பிரயோசனமில்லை; இவ்வளவுமோசம் செய்பவனிடம் உண்மை எங்கு இருக்கும்? ஆனாலும், உனக்கு லவலேசமேனும் வெட்கம் என்பது இருந்தால், உண்மை வெளியாகக்கூடாது என்ற பயமிருந்தால், என் எச்சரிக்கையை மீறி நடக்கமாட்டாய் என்று நினைக்கிறேன்."

அக்ஷயன்: "யோகா; யோகா; இராமேசபாபுவைப்பார்த்தால உனக்கு வருத்தமுண்டாகவில்லையா? இதைப்பார் எவ்வளவு பொறுமையாயும் சாந்தமாயும் உன் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுகிறார், என்று; சரி நாம் போவோம்; இராமேசபாபு, பயப்படாதேயும், நாங்கள் போய் விடுகிறோம்."

யோகேந்திரனும் அக்ஷயனும் வெளிச்சென்றனர். இராமேசன் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். பிறகு, இவ்விதத்தாக்குதலால் மெய்மாறி மறுபடி உணர்ச்சி உண்டானதும் வெளியே சற்று நடந்து சென்று தன் நிலைமையைப்பற்றி நன்கு யோசிக்கவேண்டுமென்று தோன்றிற்று; ஆனால் எப்படிக் கமலாவை ஒரு புதிய இடத்தில் தனியே விட்டுச் செல்வது என்ற நினைப்பு வரவே அவன் அடுத்த அறைக்குள் சென்றான். அங்கே ஜன்னல் புறத்தில் தெருவைப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருந்தாள் கமலா; இராமேசனின் காலடி கேட்டதும் திரும்பினாள். இராமேசனும் தரையில் உட்கார்ந்து கொள்ளவே,

"இவர்கள் யார்? இன்று காலையில் எங்கள் பள்ளிக்கூடத்திற்கும் வந்தார்கள்," என்றாள் கமலா.

"பள்ளிக்கூடத்திற்கா, அங்கேயும் வந்தார்களா?" என்றான் இராமேசன் ஆச்சரியத்துடன்.

"ஆம், ஆம். அவர்கள் உங்களிடம் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள்?"

"நீ எனக்கு என்ன உறவு என்று கேட்டார்கள்?"

கமலா மாமியாரின் காலடியில் வளர்ந்து எப்பொழுது வெட்கித் தலைகுனியவேண்டும் எவ்விதம் புது மணப்பெண் நடந்து கொள்ளவேண்டும் என்று படித்தவள் அல்ல; ஆனாலும் இராமேசன் இப்படிச் சொன்னதும் இயற்கை வாசனையாலேயே வெட்கம் கொண்டவளாய் முகம் சிவந்தாள்.

இராமேசன்: "அதற்கு, நான் நம்மிருவருக்கும் ஒருவித சம்மந்தமும் இல்லையென்று சொல்லிவிட்டேன்."

இவ்விதப் பரிஹாசப்பேச்சு சரியல்ல என்று கமலா கருதினவளாய் கோபத்துடன் "இதென்ன விளையாட்டு" என்றாள்.

கமலாவிடம் எவ்விதம் முழு உண்மையையும் வெளியிடப் போகிறோம் என்று தயங்கித்திகைத்து நின்றான் இராமேசன்.

திடீரென கமலா: "அதோ, காக்கை உங்கள் பழத்தைக் கொத்திக் கொண்டுபோகிறது" என்று விரைந்தெழுந்து அடுத்த அறையுட் புகுந்து காக்கையை ஓட்டிவிட்டு பழத்தட்டுடன் திரும்ப வந்தாள். தட்டை இராமேசன்முன் வைத்து "நீங்கள் கொஞ்சங்கூட சாப்பிடவில்லையே" என்றாள்.

இராமேசனுடைய பசியெல்லாம் பறந்தோடிவிட்டது. ஆனால் இந்த உபசாரத்தால் மனமுவந்து "கமலா, நீயும் கொஞ்சம் சாப்பிடமாட்டாயா?" என்றான்.

கணவனுக்குமுன் புசிக்கக்கூடாதென்ற மனைவியின் கடமையைக் கைப்பிடித்தவளாய் "நீங்கள் முதலில் கொஞ்சம் சாப்பிட்டாகட்டும்" என்றாள். இது சகஜந்தான் என்றாலும் இராமேசன் மனது அதிக வருத்தமடைந்தது; இவ்விதம் இந்தபேதைப் பெண் தன்னைக் கணவனெனக் கருதுகிறாளே என்று அவன் கண்களில் நீர் ததும்பிற்று. அழுகை வாயையும் நெஞ்சையும் அடைத்தது. ஆயினும் எப்படியோ துயரத்தை அடக்கிக்கொண்டு பழத்தைச் சாப்பிட்டான். சாப்பிட்டானதும், 'கமலா, நாம் இன்று ஊருக்குப்போகவேண்டும்' எனவே, கமலாவின் முகம் வாடிற்று.

'எனக்கு அங்கேபோகப் பிடிக்கவில்லை' என்றாள். இராமேசன்: 'பள்ளிக்கூடத்திலேயே இருக்க இஷ்டமா?'

கமலா: 'வேண்டாம், வேண்டாம்; என்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாதேயுங்கள், அங்கே எல்லாப் பெண்களும் உங்களைப்பற்றி கேள்விகள் கேட்கிறார்கள். எனக்கு வெட்கமாயிருக்கிறது.' இராமேசன்: 'நீ என்ன பதில் சொல்லுகிறாய்?'

கமலா: "நான் ஒன்றும் சொல்வதில்லை. என்னை ஏன் விடுமுறை நாட்களிலும் அங்கேயே இருக்க வேண்டுமென்று நீங்கள் சொன்னீர்கள் என்று கேட்டார்கள், நான்—" கமலாவால் மேல் வார்த்தையை சொல்ல முடியவில்லை. பழைய ஞாபகம் மனதிலிருந்த புண்ணைக்கிளரவே, துக்கம் மேலிட்டது.

இராமேசன்: "எனக்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று சொல்லிஇருக்கலாமே"

கமலாவுக்குக் கோபத்தால் கடைக்கண் துடித்தது: "இதென்ன விளையாட்டு" என்றாள் மறுபடியும். "நான் என்ன செய்வேன்" என்று கவலைப்பட்டான் இராமேசன்.

மறைத்து மனதிற்குள் அடக்கி இருந்த இரகசியமானது வயிற்றைப் பிடுங்கித்தின்னும் கிருமி போல அவனுடைய மர்ம ஸ்தானங்களைப் பிளக்கவே அவனால் சகிக்க முடியவில்லை. அநேக சந்தேகங்கள் அவனுடைய மனதில் உதித்து அவனை வருத்தின. யோகேந்திரன் ஹேமநளினியிடம் இதற்குள் என்ன சொல்லி இருப்பானோ? ஹேமநளினி அந்தச்செய்தியை எவ்வாறு ஏற்றனளோ? அவளிடம் உண்மையை எப்படி இனிமேல் எடுத்துச் சொல்லமுடியும்? அவளை விட்டுப்பிரிந்து எப்படி இருக்கமுடியும்? என்ற இவ்விதமான கேள்விகளுக்கு பதில் நினைப்பதிலேயே அவன் மனது புண்பட்டு உலைந்தது.

இதுமட்டும் அவனுக்கு நன்கு விளங்கிற்று, தன் நண்பர் பகைவர் எல்லோருக்குமே அவனுக்கும் கமலாவிற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிப் பேசுவதில் அதிக குதூகலம் இருக்குமென்று; தான் கமலாவை தன் மனைவி என்று தெரிவித்ததான பிசகு எங்கும் பரவி அதுவரை இருந்த சந்தேகங்களையும் ஊர் பேச்சையும் வளரச்செய்யும்; இனி ஒரு நாட்கூட அவளுடன் இங்கே இருக்கக்கூடுமோ?

இவ்விதம் இராமேசன் மெய்மறந்து யோசனையில் ஆழ்ந்திருப்பதை கமலா கவனிக்காதிருக்கவில்லை. அவனைப்பார்த்து,

"என்ன கவலைப்படுகிறீர்கள்? நீங்கள் ஊரில் போய் இருக்கவேண்டுமானால் நானும்கூட வருகிறேன்" என்றாள்.

இவ்விதம் அந்தச்சிறுமி தன் விருப்பங்களை நிராகரித்து அவனுக்கு இணங்கிப்பேசியது மறுபடியும் அவனுடைய மர்ம ஸ்தானத்தைப் பிளந்ததுபோலிருந்தது. மறுபடியும், என்ன செய்வது என்று திகைத்தான் இராமேசன். இவ்விதம் அவள் பேசியதற்கு யாதொரு பதிலும் அளியாமல், கமலாவை உற்று நோக்கிக்கொண்டே, மறுபடி யோசனையில் ஆழ்ந்தான். ஏதோ, இனி விளையாட்டுத்தனத்துடன் இருக்கக்கூடாது என்று நிச்சயித்து, கமலா: 'நான் பள்ளிக்கூடத்திலேயே விடுமுறை நாட்களும் இருக்கமாட்டேன் என்றதற்காக வருத்தப்படவில்லையே நீங்கள்? வாஸ்தமாய்?' என்று கேட்டதும், இராமேசன்: "வாஸ்தவத்தில் உன்மேல் எனக்கு ஒரு கோபமும் இல்லை; என்மேல்தான் எனக்கு வருத்தம்."

பிறகு, அதிக யத்தனம் செய்து, தன் மனதில் எழுந்த எண்ணங்களை யெல்லாம் ஒதுக்கிவைத்து,

கமலாவுடன் சம்பாஷணை செய்யத் துவக்கினான், "இங்கே வா, கமலா, இதுவரை பள்ளிக்கூடத்தில் என்னவெல்லாம் கற்றுக்கொண்டாய் சொல்,' என்று ஆரம்பிக்கவே, கமலா உத்சாகத்துடன் தான் படித்ததை யெல்லாம் சொல்லலானாள். பூமி உருண்டையாய் இருக்கிறது என்று தான் கற்றுக்கொண்டதைச்சொல்லி இராமேசனை ஆச்சரியப்படச்செய்ய எண்ணி, அதைப்பற்றிப் பேசினாள். இராமேசன்: " அதெப்படி யிருக்கும், நான் நம்ப மாட்டேன் " என்று சொல்லவே, கமலா அதிசயத்தால் அகன்ற கண்களுடன், " என்ன, எங்கள் புஸ்தகத்தில் இருக்கிறதே, அதைப்பற்றி யெல்லாம் நாங்கள் வாசித்திருக்கிறோமே ! " என்றாள். இராமேசன் ஆச்சரியப்படுபவன்போல் "இதென்ன, இது, புஸ்தகத்திலேயா இருக்கிறது, அந்த புஸ்தகம் எவ்வளவு பெரிதாக இருக்கும் ?" என்று கேட்டான். இந்த கேள்வி கேட்டதும், கமலா, " அவ்வளவு பெரிய புஸ்தகமில்லை அது; இருந்தாலும் அச்சிட்டு, பெரிய படங்களும் இருக்கிறது அதிலே " என்று சொன்னாள், இதற்கு மறு பேச்சு உண்டோ ? வேறு ருசு வேண்டுமோ இராமேசனை நம்பச்செய்வதற்கு ? இராமேசன் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியவில்லை.

இவ்விதமாக, கமலா தான் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட விஷயங்களைப்பற்றி யெல்லாம் விவரித்துச் சொன்னபின், பள்ளிக்கூடத்திலிருந்த மற்றப்பெண்களைப்பற்றியும் உபாத்தியாயினிகளைப்பற்றியும் பள்ளிக்கூடத்தில் படிப்பு முறையைப்பற்றியும் இராமேசனிடம் சொல்லும்போது, இராமேசன் மறுபடி யோசனையில் ஆழ்ந்தவனாய், மெய்மறந்து "உம்" "உம்" என்று மட்டும் கேட்டுக் கொண்டிருந்தானே யொழிய, அவள் சொன்னதொன்றும் அவன் காதில் படவில்லை. சில வேளைகளில் வார்த்தையின் முடிவில் கேட்டுக்கொண்டிருப்பவன்போல் மேல்கேள்வி கேட்பான்.

திடீரென, கமலா "நான் சொன்னதொன்றையுமே கவனித்துக் கேட்கவில்லையே" என்று வருத்தத்துடன் எழுந்திருந்தாள்.

இராமேசன், திடுக்கிட்டு : "கோபித்துக்கொள்ளாதே, கமலா, எனக்கு உடம்பு சரியாக இல்லை." கமலா உடனே "ஏன், என்ன உடம்புக்கு ?" என்று விசாரப்படவே, இராமேசன் : "உடம்பு விசேஷமாய் ஒன்றும் இல்லை ; நிசமாய், ஒன்றுமில்லை ; ஆனால் இந்த மாதிரி சில வேளை இருக்கிறது எனக்கு ; அதிருக்கட்டும், மேலே, சொல்லு." "எங்கள் பூகோள புஸ்தகத்தில் இருக்கும் படத்தைப் பார்க்கிறீர்களா ?" என்று, தான் புதிதாய் கற்றுக்கொண்டதைச் சொல்லி உத்சாகப்படுத்த முயன்றாள் கமலா.

இராமேசன் "சரி, கொண்டுவா, பார்ப்போம்" என்று சொல்லவே, கமலா அந்தப்புஸ்தகத்தை உடன் கொண்டுவந்து அவனெதிரில் பிரித்து வைத்து "இதோ இந்த இரண்டு உருண்டைகள் காணப்படுகிறதே, அவை இரண்டும் ஒன்றே ; ஏனென்றால், உருண்டையின் இரு புறமும் ஒரே காலத்தில் காணமுடியாதல்லவா !"

இராமேசன் இதைப்பற்றி யோசிப்பவன்போல் காணப்பட்டான் ; "தட்டையாய் இருந்தாலும் அப்படித்தானே" என்றான். அதைக்கவனியாமல், "அதனாலே தான் இதில் இரண்டு பாதிகளையும் தனித்தனியாகக் காண்பித்திருக்கிறது" என்றாள் கமலா ; இவ்விதமாக அவர்கள் விடுமுறை நாட்களில் முதல் நாள் பொழுதைப் போக்கினார்கள்.

மதிப்புரை (புத்தகங்கள்)

[உதவி பத்திராதிபர்]

காந்தம்: ஒரு சிறிய கதையே. படிப்போருக்கு ஐந்து அல்லது பத்து நிமிஷந்தான். ஆயினும் படித்தபின் மனம் எப்பாடு படுகின்றது ! காந்தாவின் காதலின் பெருமையைப் புகழ்வதா! ஜயவீரன் உத்தம தியாகத்தைக் கூறுவதா! நீதிசேகரனுடைய கொடும் நீதியை மெச்சுவதா! இச்சிறிய கதைப் புத்தகத்தை எளிதில் 'பதினெட்டாம் பெருக்கன்று ஆற்றில் விட்டுவிடலாம்.' ஆனால் மனதில் நிலைபெற்றிருக்கும் அதன் சிறப்பை யகற்ற இயலாதே !

(இதன் ஆசிரியர் ஸ்ரீமான். கி. ராஜகோபாலாச்சாரியார். விலை கால் ரூபாய். சென்னை, கோமளேசுவரன் பேட்டை, "லோகோபகாரி" ஆபீஸில் கிடைக்கக்கூடியது.)

பூலோகத்து ஸப்த அதிசயங்கள்: 'இது கருப்பு மனிதரென்று இகழப்படும் நம்மவர் நாகரிகத்தின் பழைமையை விளக்குகின்றது.' இவ்வேழு அதிசயங்களாவன: எகிப்து தேசத்துப்பிரேத கோபுரங்கள், ஆர்ட்டிமிசியாள் கட்டிய பிரேதாலங்கார ஞாபகச் சின்னம், எபேசு நகரத்துத் தையனாள் தேவி ஆலயம், பாபிலோன் நகரத்துக் கோட்டை மதில்களும் ஆகாய பூந்தோட்டங்களும், ரோட்ஸ் நகரத்து ஞாபகத் தாமிரச் சிலை, ஜூபிட்டர் ஒலிம்பியஸின் சிலை, அலெக்சாந்திரியா நகரத்துப் போஸ் எனப்பெயர்கொண்ட காவற்றீபக்கோபுரம். இவ்வதிசயங்களடங்கிய இந்நூல் இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது.

(இதன் விலை கால் ரூபாயே. மேலே கண்ட 'லோகோபகாரி' ஆபீஸிலேயே கிடைக்கக் கூடியது)

நாயன்மார். 'இந்நூற்கண் சாதிப்பகைமையின்மை, அன்பு சமய மாண்பு, தொண்டின் சிறப்பு, உண்மை உறுதி அஞ்சாமை, மக்கட்கு இன்றியமையாத வேறு பல செம்பொருள்கள் சுருங்க ஓதப்பட்டிருக்கின்றன. திருத்தொண்டத் தொகையும் இதனோடு சேர்க்கப்பட்டிருக்கிறது.' நாத்திகம் புகட்டும் தற்காலகல்வி பயின்று சாதிப்பகைமை முதலிய தீயகுணங்கள் அதிகரிக்கும் நாகரிகத்தில் உழலும் நம் சகோதரர்களும் சகோதரிகளும் இதனைத் திரப்படித்து நன்மை பெறுவார்களாக. இதனை இயற்றிய ஆசிரியருக்கும், உலகத்தாருக்கு பயன்பட வெளியிட்ட காரைக்குடி காரைச்சிவனடியார் திருக்கூட்டத்தாருக்கும் நாம் கடமை பட்டிருக்கிறோம்.

துண்டுப்பிரசுரங்கள்: காரைக்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தார் வெளியிட்ட சில துண்டுப் பிரசுரங்கள் நம் பார்வைக்கு கிடைத்தன. இவர்கள் உலகத்திற்குச் செய்யும் தொண்டுகள் வெகு உயர்ந்தனவே. ஜீவஹிம்சையில் ஆழ்ந்துகிடக்கும் நம் ஜனங்களுக்கு இப்பிரசுரங்கள் வெகு உபயோகமுள்ளன.

பரதகண்டத்தின் நிலைமை: நம் தேசம் கைத்தொழில், விவசாயம் முதலியவைகளில் முன்னேற்றமடைய வேண்டிய இக்காலத்தில் இப்புத்தகம் இந்நோக்கத்தை முன்னிட்டு வெளிவந்தது, மிகவும் பாராட்டத்தக்கது. ஆதிகாலத்தில் நாம் பெற்றிருந்த செல்வச் செழிப்பும், இப்போது இருக்கும் சீர்கெட்ட நிலைமையும், இதைச் சீர்திருத்தி

நாம் உய்யும் வழிகளும் வெகு நன்றாய் இப்புத்தகத்தில் வரைந்துள்ளன. விஷய விளக்கமும் சரித்திரக் கோர்வையும் வேகு நேர்த்தியாயமைந்துளது. தடைபட்ட வியாபாரம் (Protection) தடையில்லாவியாபாரம் (Free Trade) இவ்விஷயங்கள் விரிவாய் யாவருக்கும் எளிதில் விளங்கும்படி உரைக்கப் பட்டுள்ளன.

(விலை, ரூபாய் ஒன்று; சென்னை, கணேஷ் கம்பெனியில் கிடைக்கும்.)

ஷண்முகன் மகிமை: நம்புராணங்களையும், சாஸ்திரங்களையும் மதத்தையும் சிறுவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் கற்பிப்பதற்காக இப்புத்தகத்தைப் போன்ற பல புத்தகங்கள் வெளிவந்து பள்ளிக்கூடங்களில் அவைகளைப் பாடமாகவைத்து ஆதரித்துவந்தால் வெகு நலமன்றோ! தமிழ் நடையை நோக்கும்போது எழுதியவர் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பயன்படுவதையும் கருத்தாகக்கொண்டு இதை வெளியிட்டிருக்கிறார் என்று தெளிவாகிறது.

(விலை அணு 12; சென்னை, வி. ஆர். வி. செகண்டரி ஸ்கூல் உபாத்தியாயர், எல். எஸ். விசுவநாதய்யரிடம் கிடைக்கும்.)

உலகியல் விளக்கம்: இதன் ஆசிரியர் 'செந்தமிழில்' பல அரிய இலக்கண விஷயங்களை எழுதிவந்திருக்கிறார். 'உயர்தரச் செய்யுட்களியற்றும் வன்மையுடையார் இக்காலத்தும் உளராதல் தமிழுலகு செய்த தவப்பயனேயாகும்;' அறமுதல் நாற்பொருளையும் தொகை விரியாக விளக்கும் சிறப்புவாய்ந்த இவ் 'உலகியல் விளக்கம்' என்ற நூலினை தமிழ்மொழிமேல் நிறைந்த ஆர்வமுடையாரனைவரும் பெரிதும் பாராட்டி, மேற் கூறிய நால்வகைப்பொருளையும் பயன்படப் பெறவேண்டும். 'பூமாலைக்குண்டழிவு, பொன்மாலைக்கேதுமணம், பாமாலைக்குண்டே பயன்' என்றவாறு சிறந்த பாமாலையில் இயற்றிய இந்நூலின் ஆசிரியர் நவநீதகிருஷ்ண பாரதியாருக்கும், இவ்வழிவில்லாப் பாமாலையின் மணத்தை உலகெங்கும் பெருகச்செய்த உரையாசிரியர் பூபாலபிள்ளை, பதிப்பாசிரியர் பண்டித மயில்வாகனனார் ஆகிய இவர்களுக்கும் தமிழ் மக்கள் நன்றி செலுத்தவேண்டும்.

(வேண்டுவோர், யாழ்ப்பாணம் பெரியகடைத் தெரு, கிள்வ் அச்சுக்கூடம் மானேஜருக்கு எழுதவும்.)

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் (எழுதியது)

	ரூ.	அ.
இந்திராபாய் ...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்		
சுந்தராங் ...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை		
அம்புஜாக்ஷி ...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொறகைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது. விலை அணு 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10 படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணு 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாசந்தோறும் படிக்கும் பக்த சிரோமணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது. விலை அணு 4.

சிறைவாசஞ் செய்யும்
கிருஷ்ணஸவாமி சர்மா
அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன் தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மனக்கிளர்ச்சியுண்டாக்ககூடியதாயுமுள்ளது. இன்பச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையில் எழுதியது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.